# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்


| | | | |
|---|---|---|---|
| மலர் : 7 | இதழ்: 2 | நவம்பர் : 2022 | ரூ.20/- |
| Volume: 7 | Issue: 2 | November : 2022 | Rs.20/- |




# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**21.10.2022 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு முண்டக கன்னியம்மன் கோவில்**

மைலாப்பூர், சென்னை - 4.

**28.10.2022 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு ஓம் பாலசுப்பிரமணியர் கோவில்**

செனாய்நகர், சென்னை - 600 030.

**04.11.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் திருக்கோவில்**

அம்பேத்கார் நகர், வில்லிவாக்கம், சென்னை - 49.

போரூர், சென்னை - 600 116.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 39

**ம்ருத்[1]யோ : ஸ ம்ருத்[1]யுமாப்[1]நோதி[1]ய**
**இஹ நாநேவ ப[1]ச்யதி[1]** *(காடகோபநிஷத்)*

**பொருள் :** எவன் இந்த ஆத்மாவில் பேதம் இருப்பது போல் காண்கிறானோ அவன் மரணத்தை மேலும் மேலும் அடைகிறான். ஆத்மாவில் ஜாதி, வர்ணம், நாமம், ரூபம், கோத்திரம் முதலிய பேதங்களை எவன் ஸத்தியமாக இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறானோ அவன் அஞ்ஞானி. அப்படிப்பட்டவன் பிறப்பு இறப்புச் சக்கரத்தில் சிக்கி உழல்கிறான்.

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 7 இதழ்: 2

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| கார்த்திகை மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 14 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 17 |
| தெரிந்துகொள்வோம் | 20 |
| ஔவையார் | 21 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 22 |
| மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 24 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு | 25 |
| தர்மத்தின் குரல் | 26 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| எண்ணமே வாழ்க்கை | 34 |
| சாதனைப்பறவைகள் ஸ்ரீ சிவபிருந்தாதேவி | 37 |
| தருவின் நிழலில் | 40 |
| இராமாயணம் வாழ்வியல் | 43 |
| கண்டனூர் அருள்மிகு செல்லாயி அம்மன் | 46 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:

எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**

**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

## ஒரு நிமிடம் உங்களோடு...

# 52. வளைந்தால் உயரலாம்

*பொதுவாக வளைந்த பொருளுக்கு மதிப்பும், அழகும் உண்டாகிறது. வளைவினால்தான் உயர்வு உண்டாகிறது.*

*1. நம்முடைய புருவம் வில்லைப்போல் வளைந்துள்ளதால் தான் அழகாக இருக்கிறது. அது நேராக இருந்தால் முகம் எப்படி இருக்கும்?*

*2. ஒருவருடைய தலையில் தலைமுடி நேராக இருக்கிறது. மற்றவருக்கு வளைந்து வளைந்து கடல் அலைபோல் சுருண்டு இருக்கிறது. இவர்களில் சுருண்ட தலை முடி உள்ளவர்தான் பார்க்க அழகாக இருப்பார்.*

*3. "யாழ்" வளைந்து இருப்பதால்தான் அதிலிருந்து மதுரகானங்கள் எழுகின்றன.*

*4. நதி வளைந்து ஓடும்போதுதான் பார்க்க அழகாக விளங்குகிறது.*

*5. ஒரு பெண் இடை சாய்த்து, தலை வளைந்து நின்றால்தான் பார்க்க அழகாக தோன்றுவாள். அவள் நெட்டையாக நின்றால் விகாரமாக இருப்பாள்..*

*6. பூ மாலையை நேராக தொங்கவிட்டால் அது அழகு செய்யாது. வளைந்து வட்ட மாலைதான் அழகாக இருக்கும்.*

*7. நர்த்தனமாடும் நடராஜர் சிலையில் பாதங்கள் வளைந்திருப்பதால்தான் பார்க்க அழகாக காட்சியளிக்கிறது.*

*8. வானவில் வளைந்து இருப்பதால்தான் அழகைத் தருகிறது.*

*ஆதலால் சிறுவர்களும், சிறுமிகளும் இளம் வயதில் பெற்றோரிடத்திலும், ஆசிரியரிடத்திலும் அடக்கமாக பணிவுடன் வளைந்து கல்வி பயின்றால் அவர்கள் உலகம் போற்ற இன்புற்று உயர்ந்து வாழ்வார்கள்.*

*வீட்டிலும் வெளியிலும் வளையாமல் திரியும் பிள்ளைகள் கல்வியறிவும், நல்லொழுக்கமும், அடக்கமும் இன்றி வாழ்நாள் முழுவதும் துன்புற்று இகழ்ச்சியுறுவர்.*

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**

**அதனினூஉங் கில்லை உயிர்க்கு**

**(குறள் 13 – அடக்கமுடைமை – 122)**

**பொருள் :** *உயிருக்கு அடக்கத்தினும் மேலான செல்வம் இல்லை. ஆகையால் அவ்வடக்கத்தை சிறந்த பொருளாகக் கொண்டு காக்க வேண்டும்.*

**D. சூரியநாராயணன்**


உ

ஸ்ரீ குருவே சரணம்

# வேதபாரதி

## கோடி காயத்ரீ ஜப யக்ஞம் - பூர்த்தி விழா

27.11.2022, ஞாயிற்றுக்கிழமை

*இடம் :*

**ஸ்ரீ சங்கர வித்யாலயா, ஊரப்பாக்கம்**

சென்னை.

**அனைவரும் வருக! வருக!!**

*தொடர்பு :*

**94441 32170 / 98408 38378**

## சுபக்ருது வருஷம் - கார்த்திகை மாத விசேஷங்கள்
### (நவம்பர் 17.11.2022 முதல் டிசம்பர் 15.12.2022 வரை)

| | | | |
|---|---|---|---|
| 17.11.2022 | கா 1 | வியாழன் | முடவன் முழுக்கு |
| 20.11.2022 | கா 4 | ஞாயிறு | ஏகாதசி |
| 21.11.2022 | கா 5 | திங்கள் | ஸோமப்பிரதோஷம் |
| 22.11.2022 | கா 6 | செவ்வாய் | மாத சிவராத்ரி |
| 23.11.2022 | கா 7 | புதன் | அமாவாஸை |
| 24.11.2022 | கா 8 | வியாழன் | அனுஷம் |
| 27.11.2022 | கா 11 | ஞாயிறு | சதுர்த்தி |
| 29.11.2022 | கா 13 | செவ்வாய் | சஷ்டி |
| 04.12.2022 | கா 18 | ஞாயிறு | ஏகாதசி |
| 05.12.2022 | கா 19 | திங்கள் | ஸோமபிரதோஷம் |
| 06.12.2022 | கா 20 | செவ்வாய் | திருவண்ணாமலை தீபம் |
| 07.12.2022 | கா 21 | புதன் | வைகானஸ தீபம் |
| 08.12.2022 | கா 22 | வியாழன் | பௌர்ணமி |
| 10.12.2022 | கா 24 | சனி | ஸ்ரீ பரசுராம ஜயந்தி |
| 11.12.2022 | கா 25 | ஞாயிறு | சதுர்த்தி |
| 14.12.2022 | கா 28 | புதன் | சஷ்டி |

### 23.11.2022 புதன்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயணே சரத் ருதௌ, விருச்சிக மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து ஸௌம்ய வாஸர யுக்தாயாம் விசாக நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

*இந்த மாத புத்தகத்தின் முகப்பு அட்டையில் அலங்கரிப்பது ஸ்ரீ காயத்ரீ மாதா.*

*எல்லாம் வல்ல ஸ்ரீ காயத்ரீ மாதாவின் அருளாலும், மஹாபெரியவாளின் ஆசியாலும், பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படியும் கடந்த 23.04.2017 ஞாயிறு அன்று வேதபாரதி சென்னையில் நடத்திய முதல்* **“கோடி காயத்ரீ ஜப யக்ஞம்”** *மிகச் சிறப்பாக நடைந்தேறியது.*

*ஐந்து வருடங்களுக்கு பிறகு இந்த வருடம் (2022) மீண்டும் இரண்டாவது முறையாக* **“கோடி காயத்திரி ஜபயக்ஞ ஹோமம்”** *நடத்த வேண்டும் என* **நெரூர், பூஜ்யஸ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** *ஆக்ஞையிட்டுள்ளார்கள். அதற்கான ஆரம்பவிழா ஸ்வாமிகளின் தலைமையின் கீழ் 14.04.2022 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.*

*ஸ்வாமிகளின் அறிவுரைப்படி கோடி காயத்ரீ ஜப யக்ஞத்தை 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை ஊரப்பாக்கம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் நடத்த தீர்மானித்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜப அட்டை வாங்கி உறுப்பினர்களாக பதிவு செய்துகொண்டவர்கள் ஆர்வமுடன் தினமும் காயத்ரீ மந்த்ரம் ஜபித்து வருகிறார்கள்.*

**காயத்ரீ மந்திரத்தின் மகிமைகள் :**

**ப்ருஹத்ஸாம ததா ஸாம்னாம் காயத்ரீ சந்தஸாமஹம்/**
**மாஸானாம் மார்கசீர்ஷோஹம் ருதூனாம் குஸுமாகர://**
**(கீதை 10-35)**

*பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா* **“சந்தங்களில் நான் காயத்ரீ”’** *என்கிறார்.*

**நாரதர் :** *த்வமேவ சந்த்யா காயத்ரி, சாவித்ரி, ஸரஸ்வதி பிரும்மாணி வைஷ்ணவி ரகதஸ்வேதா, ஸதேதரா” என்று புகழ்கிறார்.*

**ப்ரம்மா :** *காயத்ரீயைவிட சிறந்த ஜபமந்திரமில்லை, அதைவிட உயர்ந்த தபஸ் இல்லை. அதைவிட சிறந்த தியானம் செய்யத்தக்க வஸ்து இல்லை.*

**யமர் :** *காயத்ரீ நான்கு வேதங்களுக்குச் சமமானது.*

**வியாஸர் :** *10 முறைஜபித்தால் 3 நாளில் செய்த பாபம் அகலும். 100 முறைஜபித்தால் ஸர்வ பாபமும் அகலும், 1000 முறைஜபித்தால் உபபாதகங்கள் அகலும், கோடி முறைஜபித்தால் விரும்பிய எல்லாம் கிட்டும், ராஜனாகலாம், தேவனுமாகலாம்.*

**விஸ்வாமித்திரர் : "பிரம்ம தேஜோ பலம் பலம்".** *பிரம்மாஸ்திரம் எனும் இணையற்றஅஸ்திரத்திற்கு "காயத்ரீ'' மந்திரமே ஆதாரம் விஸ்வாமித்திரரிடம் காயத்ரீ மந்திர உபதேசம் பெற்றதாலேயே ஸ்ரீ ராமபிரான் ராவணனை வென்றதாக சொல்லப்படுகிறது.*

**ஆன்றோர்களின் வாக்கு :**

**சங்கரர் :** *ஸ்நானத்துக்குரிய மந்த்ரங்களும் அகமர்ஷணம், ஹோம மந்திரத்தில் வ்யாஹ்ருதி, மந்த்ர ஜபத்தில் "காயத்ரீ'' மந்திரம் இவைகளே மிக சிறந்தவைகள்.*

**ஸம்வர்த்தர் :** *பாபங்களை அகற்ற"காயத்ரீயைவிடச் சிறந்த மந்திரமில்லை.*

**மார்க்கண்டேயர் : ஒருவன் எவ்வளவு பாபம் செய்திருந்தாலும்** *10000* **காயத்ரீ ஜபம் செய்துவிட்டால் அவைகள் பறந்தோடும் தீர்க்க ஆயுளைத்தரும்.**

**மஹா பெரியவா :** *மூன்று தலைமுறையாக காயத்ரீயை விட்டுவிட்டவன் பிராம்மணனாகமாட்டான். அப்பேர்பட்டவர்கள் இருக்கிற தெரு அக்ரஹாரம் ஆகாது.*

**சுவாமி விவேகானந்தர் :** *மந்திரங்களின் கிரீடம் காயத்ரீ மந்திரம்.*

**சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸர் :** *பெரிய பெரிய*

*கடுந்தவ முயற்சிகளில் மனிதர்கள் ஈடுபடுவதனைக் காட்டிலும் காயத்ரீ மந்திரத்தினை ஜபிப்பது மிகப்பெரிய சாதனையாகும். இது மிக சிறிய மந்திரம்தான். ஆனால் மிக மிக சக்தி வாய்ந்தது.*

**மகாத்மா காந்தி :** *யார் ஒருவர் காயத்ரீ மந்திரத்தினை ஜபிக்கின்றாரோ அவர் நோய்க்கு ஆளாகமாட்டார்.*

**விஞ்ஞானிகளின் வியக்கும் மந்திரம் :**

**ஜே.பிஎஸ்.ஹால்டேன் என்றபிரபல விஞ்ஞானி (1892 – 1964) :** *காயத்ரீ மந்திரத்தினைப் பற்றி குறிப்பிடும்போது காயத்ரீ மந்திரம் ஒவ்வொரு இரசாயன கூடங்களின் வாயில் கதவிலும் காயத்ரீ மந்திரம் பொறிக்கப்பட வேண்டும்' என்று கூறியுள்ளார்.*

**ஆர்தர் கொயெஸ்ட்லர் விஞ்ஞானி :** *காயத்ரீ மந்திரம் 1000 ஆட்டம் பாம்களுக்குச் சமம்.*

**மெக்ஸ் முல்லர்** – *ஜெர்மன் தத்துவ விஞ்ஞானி (1823 – 1900) சூரிய ஒளியினை தவம் செய்து நம் மூளை, மனதினை உயர்த்துவோம்.*

**அமெரிக்க விஞ்ஞானி ஸ்ட்ராங்ளர் :** *காயத்ரீ மந்திரத்தை ஆராய்ந்தபின் கூறியது "வினாடிக்கு இரண்டு லட்சம் அதிர்வுகளை ஏற்படுத்தும் இந்த மந்திரம் அபூர்வமாக அஃது ஒலிக்கப்படும் இடத்திலிருந்து சுமார் 1600 மைல் தூரம் வரை சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துகிறது.*

**"யக்ஞம்'' எனப்படும் ஹோமங்கள் எதற்காக செய்யப்படுகின்றன?**

*இறைவன் உலகில் மனிதன் முதற்கொண்டு சகல ஜீவராசிகளையும் படைத்தும், காத்தும், அழித்தும் உலக இயக்கத்தை நிகழ்த்துகிறார். இறைவன் தன் பக்தர்களிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை, எதிர்பார்பபது எல்லாம் உண்மையான பக்தியையும் மற்றஉயிர்களிடத்தில் அன்பையும் மட்டுமே. ஆனால் நாம் நம்முடைய சுயநலத்திற்காக செய்யும் பிரார்த்தனைகளைத் தவிர வேறு எதையுமே*

இறைவனுக்காக செய்வதில்லை. அந்தக் குறையைத் தீர்ப்பதற்காகச் செய்யப்படுவதே **“யக்ஞம்”** எனப்படும் ஹோமங்கள். **முற்காலங்களில்** உலக நன்மைக்காகவும், இறைவனாக நாம் பூஜித்த சூரியன் மலை போன்றவற்றுக்காக ஹோமங்கள் செய்யப்பட்டுவந்தன. ஆனால் இன்று தனிப்பட்டவர்களின் நலன்களுக்காக ஹோமங்கள் செய்யப்பட்டுவருகின்றன. ஹோமங்கள் செய்யும்போது பசுவிடமிருந்து கிடைக்கும் நெய் மற்றும் இயற்கையாக கிடைக்கும் பலவித திரவியங்களை மந்திர பூர்வமாக அக்னியில் இடுகிறோம். அந்த பொருட்கள் அக்னியில் சாம்பல் ஆவதுமட்டும்தான் நம் கண்களுக்குத் தெரியும். ஆனால் அதன் பலன் இறைவனை அடைவது சூட்சம ரகசியம். அக்னி இவற்றைதானே எடுத்துக்கொள்ளாமல் இவற்றின் சாரத்தை அந்தந்த தேவதைக்கு அனுப்பி வைக்கின்றது என்று காஞ்சி மஹா பெரியவா கூறியுள்ளார். நாம் செய்கின்றஹோமங்களில் திருப்தி அடைந்து நமக்கு அனுக்கிரகத்தை அள்ளித் தருகின்றனர் தேவர்கள். மேலும் ஹோமத்தின்போது அதிலிருந்து கிளம்பும் புகையானது காற்றில் கலந்து எல்லா இடங்களிலும் பரவி இயற்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை இன்றைய விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஹோம குண்டங்களில் திரவியங்களை இடும்போது நாம் உச்சரிக்கும் பல்வேறு மந்திரங்களின் ஒலியலைகள் அந்த ஹோமம் எதற்காக செய்யப்படுகிறது என்றநோக்கத்தை நிறைவேற்றி வைக்க உதவுகிறது.

வேதபாரதி மேற்கொண்டுள்ள **“கோடி காயத்ரீ ஜப யக்ஞம்”** சிறப்பாக நடைபெறஎல்லாம் வல்ல அந்த காயத்ரீ மாதாவை பிரார்த்திப்போம்.

**D. சூரியநாராயணன்**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. **சூரியநாராயணன்** பகுதி - 43

## அத்தியாயம் – 2
## "ஸாங்கிய யோகம்"

அடுத்து 56ஆவது ஸ்லோகத்திலும் **"ஸ்திதப்ரக்ஞன்"** லக்ஷணம்பற்றி பகவான் கூறுகிறார்.

**து$^{3}$கே$^{2}$ஷ்வநுத்$^{3}$விக்$^{3}$நமநா:ஸுகே$^{2}$ஷு விக$^{3}$தஸ்ப்ருஹ:/**
**வீதராக$^{3}$ப$^{4}$யக்ரோத$^{4}$: ஸ்தி$^{2}$ததீ$^{4}$ர்முநிருச்யதே//**

**(கீதை 2-56)**

பொருள் : துன்பங்கள் நேர்கையில் எவனுடைய மனம் கலங்குவது இல்லையோ, சுகங்கள் அடையும்போது அவற்றில் சிறிதுகூட ஆசை கொள்வதில்லையோ, எவனுக்கு விருப்பு, கோபம் ஆகிய இவை முற்றும் அற்றுப்போயினவோ, அத்தகைய முனிவன் **"ஸ்திதப்ரக்ஞன்"** என்று கூறப்படுகிறான்.

**விளக்கம்** = துன்பம் வரும்போது துவண்டுவிடாமலும், இன்பம் வரும்போது துள்ளி குதித்து அதிலேயே நிற்காமல், ஆசை, அச்சம், கோபம் முதலியவற்றைஅகற்றுகிறவன் ஞானத்தை உடையவன். அவனை **"முனிவர்"** என்று கூறலாம் என்கிறார் பகவான்.

பாம்பிடத்திலும், மரணத்திடமும் நமக்கு பற்று (ஆசை) கிடையாது. ஆனால் அவற்றைக் கண்டு பயம் உண்டு. அந்த பயமும் இருக்கக்கூடாது.

இதிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ள வேண்டியது, காம, க்ரோத, லோப, மத, மாத்ஸர்யம் ஆகிய குணங்களுங்கு அடிபணியாமல், ஆசையையும்

அறவே விட்டு ஒன்றிலும் சேர்க்கை வைக்காமல் ஆத்மஞானத்தில் நிஷ்டையுடன் இருக்க பழகினால் யாதொரு துன்பமும் இருக்காது. நாம் ஒரு முனியாக வேண்டுமானால் தினமும் Meditation செய்ய வேண்டும்.

அடுத்த ஸ்லோகத்தில் பகவான் புறவுலகோடு முனிவன் எவ்வித இணக்கம் வைக்கிறான் என்பதை விளக்குகிறார்.

**யஃஸர்வத்ராநபி4ஸ்நேஹஸ் தத்தத்ப்ராப்ய ஸுபா4ஸுபம் /**
**நாபி4நந்த3தி ந த்3வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி2தா //**

**(கீதை 2-57)**

**பொருள் :** எவன் ஒருவன் அனைத்திலும் பாசம் வைக்காமல் அந்தந்த நல்ல அல்லது கெட்ட பொருளை அடைந்து மகிழ்வதுமில்லையோ, வெறுப்பதுமில்லயோ, அவனுடைய புத்தி ஸ்திரமானது.

எவன் எங்கும் எதிலும் பற்று இல்லாதவனாய், நலம் தருவதை அடைந்து மகிழாமலும், கேடு தருவதை அடைந்து நொந்து கொள்ளாதும் இருக்கின்றானோ அவனுடைய அறிவு உறுதி பெறுகிறது.

நல்லதும் கெட்டதும் கலந்ததுதான் உலகம். பற்று உள்ளவனுக்கு அது இன்பத்தையும் துன்பத்தையும் விளைவிக்கிறது. பற்றற்றஞானிக்கு அதனால் இன்பமும் இல்லை துன்பங்களும் இல்லை.

**ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசம் :** மலை உச்சியிலிருந்து பார்ப்பவனுக்கு கீழே உள்ள மரமும், புல்லும் ஒரே சமதரையாகத்தான் தெரியும். பிரம்ம சாக்ஷாத்காரம் பெற்றபிறகு எல்லாம் ஒரேவிதமாய்த் தோன்றும். அப்போது நல்லது கெட்டது, உயர்ந்தது தாழ்ந்தது என்றவேற்றுமை இல்லை.

கீதை தொடரும்...

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி

பகுதி - 23

சென்றமாதத்துடன் ஸ்ரீமத் பாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில் 3ஆவது அத்தியாயத்தில் ஸ்லோகம் 6 முதல் 25 வரையிலும் பகவான் எடுத்த 22 அவதாரங்கள் குறித்து பார்த்தோம்.

முதல் ஸ்கந்தத்தில் 19 அத்தியாயங்களில் 809 ஸ்லோகங்கள் உள்ளன. இந்த 19 அத்தியாயங்கள், ரிஷிகளின் கேள்விகள், ஸ்ரீ பகவானின் அவதாரங்கள், ஸ்ரீ நாரதர் தோன்றியவிதம், ஸ்ரீ நாரதர், ஸ்ரீ வியாஸபகவானுக்கு உபதேசம் செய்தது, துரோணர் பிள்ளை தண்டனை பெற்றது, குந்திதேவி பகவானிடத்தில் வைத்த ப்ரார்த்தனைகள், ஸ்ரீ பீஷ்மர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் முன் ஸ்வர்கம் போதல், ஸ்ரீகிருஷ்ணர் துவாரகைக்கு எழுந்து அருளுதல், பரீக்ஷத்தின் பிறப்பு, பாண்டவர்கள் ஸ்வர்கம் போதல், ஸ்ரீ பரீக்ஷித் கலிக்கு ஒதுக்கிய இடங்கள், பரீக்ஷித்துக்கு வந்த சாபம் முதலியவை குறித்து விளக்கியுள்ளன.

இவற்றில் ஸ்ரீபகவானின் அவதாரங்கள், ஸ்ரீநாரதரின் கதை, குந்தி ஸ்துதி, ஸ்ரீபீஷ்ம ஸ்துதி, ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகை போதல், ஸ்ரீ பரீக்ஷித்தின் சரித்திரம், அவர் கலிபகவானுக்கு ஒதுக்கிய இடங்கள் முதலியவற்றை இந்த கட்டுரையின் முதல் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது ஸ்கந்தத்தில் 10 அத்தியாயங்களில் 391 ஸ்லோகங்கள் உள்ளன. இந்த ஸ்கந்தம் புராண

லக்ஷணத்தை அனுசரித்து ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலியவற்றை வர்ணிக்கிறது. இவற்றில் அத்தியாயம் 3ல் ஸ்லோகங்கள் 20 முதல் 23 வரையிலும் உள்ள நான்கு ஸ்லோகங்களும் மிகவும் முக்கியமான ஸ்லோகங்கள். இந்த நான்கு ஸ்லோகங்களின் பொருள்.

பகவானை நினைக்காத வாழ்க்கை வீண், மரங்களும், செடி கொடிகளும், மிருகங்களும் கூட வாழ்கின்றன. வெறும் வாழ்க்கையால் ஆவது என்ன? மனிதனின் ஆயுள் சூரியன் உதயம் ஆகும்போதும், அஸ்தமனம் ஆகும்போதும் தினமும் குறைந்துகொண்டே வருகிறது.

ஸ்லோகம் 20 : பகவானுடைய பராக்கிரமங்களை கேட்காத மனிதனின் காதுகள் வீன் ஓட்டைகளே. பகவானுடைய கதைகளைப் பாடாத நாக்கானது தவளையின் நாக்கு போன்றதே.

ஸ்லோகம் 21 : பகவான் முகுந்தனை வணங்காத தலை இந்த உடம்பிற்கு வெறும் சுமையே. ஸ்ரீஹரிக்கு பூஜை செய்யாத கைகள் சவத்தின் (பிணத்தின்) கைகளே.

ஸ்லோகம் 22 : மஹாவிஷ்ணுவின் விக்ரஹங்களை பார்க்காத கண்கள் மயில்தோகையில் இருக்கும் கண்கள் போன்றவையே. பகவானின் கோயில்களுக்கு போகாத கால்கள் மரத்தால் ஆன கால்களே

ஸ்லோகம் 23 : பகவானின் திருவடிகளில் இருக்கும் துளசியின் மணத்தை அறியாதவன் மூச்சுவிடுகின்றபிணம்.

*அத்தியாயம் 5ல் இரண்டாவது ஸ்லோகத்தில் நாரதர் பிரம்மாவிடம் ஒரு கேள்வி கேட்கிறார். "பிரபோ இந்த பிரபஞ்சத்தின் லக்ஷணம் என்ன? ஆதாரம் என்ன? எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டது?, இதன் முடிவு என்ன? எதை ஆச்சரியித்து இருக்கிறது? இதைப்பற்றி கூறுமாறு பிரார்த்திக்கிறேன் என்கிறார்.*

*இந்த கேள்விக்கு பிரம்மா அளிக்கும் பதில் 15 மற்றும் 16 ஆவது ஸ்லோகங்களில் வருகிறது.*

*நாராயணபராவேதா தேவா நாராயணாங்கஜா:/*
*நாராயணபராலோகா நாராயண பரா மகா://*
*நாராயணபராயோகோ நாராயண பரம் தப:/*
*நாராயணபரம் ஞானம் நாராயண பரா கதி://*
*(பா 2-5-15,16)*

**பொருள் :** *வேதங்கள் நாராயணனைப் பற்றியவை. தேவர்கள் நாராயணனின் அவயவங்களில் தோன்றியவர்கள். உலகங்கள் நாராயணனை ஆச்ரயித்தவை. யக்ஞங்கள் நாராயணனைக் குறித்தே. யோகம் நாராயணனை அடையவே. தவம் நாராயணனுக்கே அர்ப்பணம். ஞானத்தின் நோக்கம் நாராயணனே. நாராயணனை அடைவதே பிறவியின் குறிக்கோள்.*

*இவ்வாறு கூறிய பிரம்மா நானும் பகவானால் சிருஷ்டிக்கப்பட்டவனே. அவர் அருளால் சிருஷ்டியை மேற்கொள்கிறேன்' என்று கூறிவிட்டு சிருஷ்டியைப் பற்றி விளக்குகிறார்.*

தொடரும்.....

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 4 அவதார மஹிமை பாகம் 14**

## அத்தியாயம் – 4

## தாயைக் காத்த தனயன்

பூர்ணா நதி வழிமாறி ஆர்யாம்பாள் வீட்டின் வழியாக ஓடினாலும் யாருக்கும் எந்தவிதமான ஆபத்தோ அல்லது பாதிப்போ ஏற்படவில்லை.

மறுநாள் காலையில் சங்கரன் பூர்ணாநதியில் குளிக்கப்போனபோது தன் உற்ற நண்பனான விஷ்ணுவை சந்தித்தான். அவன் சங்கரனிடம் பூர்ணா நதி வழி மாறி ஓடுவதைக்குறித்து கூறினான். ஆனால் சங்கரன் எதுவுமே கூறாமல் அந்த பூர்ணாநதியை நோக்கி ஸ்துதி செய்துகொண்டே ஒரு ஸ்லோகம் பாடினான்.


சங்கரனைப் பற்றி பல வித்வான்கள் மூலம் கேள்விபட்ட அந்த ஊர் அரசன் ராஜசேகரன் அந்த பாலகனை பார்க்க ஆசைப்பட்டு தனது அமைச்சரை ஒரு யானையுடன் அனுப்பி சங்கரனை உரிய மரியாதைகளுடன் அந்த யானையின் மீது அரண்மனைக்கு அழைத்து வரும்படி கூறினார். ஆனால் சங்கரன் அரண்மனைக்கு வர மறுத்துவிட்டான். இதைக் கேட்ட அரசன் தானே நேரிடையாக சங்கரனின் இல்லம் போய் சங்கரனை நமஸ்கரித்து சாஸ்திரதர்மங்கள் குறித்து சங்கரனிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு ஏராளமான பொற்காசுகளையும், பட்டாடைகளையும், பூமி பட்டயங்களையும் சங்கரன் முன் வைத்து **“அரசன்**

**என்ற முறையில் ஒரு அந்தணருக்கு நான் செய்ய வேண்டியவைகள் இவை. தயை கூர்ந்து இவற்றை தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்"** என்றான் அரசன்.

அரசன் கூறியதைக் கேட்ட சங்கரன் அரசனிடம் "ஏ ராஜன் கிடைத்த வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு யாரேனும் அளிக்கும் பிக்ஷையால் வயிற்று பசியாற்றி ஏதாவது ஒரு இடத்தில் படுத்து சுகமாக உறங்குபவனே அந்தணன். அபரிமிதமான தனத்தால் மனக்கவலை, வியாதி, அபிமானம், காமக்ரோதாதி தோஷங்கள் உண்டாகின்றன. ஆகவே தயவுசெய்து இவற்றை நீங்களே எடுத்துச் சென்று தாங்களே தேவையுள்ள கிரஹஸ்தர்களுக்கு வழங்கிவிடுங்கள்'' என்று கூறி, இங்கு ஓடும் பூர்ணா நதி வெள்ளப் பெருக்கால் இங்குள்ள ஸ்ரீகிருஷ்ணர் ஆலயம் சிதிலம் அடைந்துள்ளது அதை புனருத்தாரணம் செய்யுங்கள்'' என்றான்.

சங்கரனின் உறுதியான வைராக்கியம் அரசரை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. மிகுந்த மரியாதையோடு சங்கரனை வணங்கி விடைபெற்ற அரசன், சங்கரனின் வேண்டுகோளை ஏற்று அந்த கிருஷ்ணன் கோயிலை புதுப்பித்தார்.

**திருக்காலடியப்பன் கோயில், காலடி**



அந்த கிருஷ்ணன் கோயில் தற்போதும் காலடியில் ஆற்றுப்படுகையிலிருந்து கொஞ்சம் மேடான பூமியில் உள்ளது. இந்த கோயிலுக்கு **"திருக்காலடியப்பன் கோயில்"** என்று பெயர்.

இந்த கோவிலின் கருவறையில் திருக்காலடியப்பன் (ஸ்ரீ கிருஷ்ணர்) வலது கையில் வெண்ணையுடனும், இடது கையை இடுப்பில் வைத்திருக்கிறார். மேலிருக்கும் வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும் வைத்துக்கொண்டு காட்சி தருகிறார். உள்ளே வலதுபுறம் ஸ்ரீ சங்கரர் சந்நிதியும், இடதுபுறம் சாரதாம்பாள் சந்நிதியும், சக்தி விநாயகர் சந்நிதிகளும் அமைந்துள்ளன. வழிபாட்டு மண்டபத்தில் பரசுராமர் சந்நிதி உள்ளது.

ஸ்ரீசங்கரரின் தாயார் ஆர்யாம்பாள் சமாதியும் அமைந்துள்ளது. இங்கு ஒரு அணையாதீபம் உள்ளது. கோயில் அதிகாலை 5 மணி முதல் 10.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

அட்சய திருதியை முன்னிட்டு ஆண்டுதோறும் இந்த கோயிலில் கனகதாரா யாகம் நடைபெறுகிறது.

தொடரும்.....


# வேதபாரதி ONLINE வழியாக

**ரிக், யஜுர், ஸாம வேத வகுப்புகள் :**
**ஸந்த்யா வந்தன வகுப்புகள்** நடந்து வருகிறது.

அத்யாபகர் :
ப்ரம்ஹஸ்ரீ கைலாசநாத கனபாடிகள்

பொறுப்பாளர்கள் :
ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர்.

ஸம்ஸ்க்ருத வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்புக்கு : **99949 26537 / 9445102193**

# "தெரிந்து கொள்வோம்"

## உ. காதுக்கு பின் துளசி சூடுவது

*விஷ்ணு கோவிலுக்கு சென்று பகவானை வணங்கிய பின்னர் தீபாராதனை முடித்து கோவில் பட்டர் நமக்கு* **"துளசி தீர்த்தம்"** *தந்து, ஒரு மகுடத்தின்மீது இரண்டு திருவடிகள் பொறிக்கப்பட்ட* **"சடாரி"** *யை நம் தலையில் வைத்து, பகவானுக்கு அர்ச்சனை செய்த* **"துளசி"***யும் தருவார். ஒரு சிலர் அந்த துளசியை தங்களுடைய காதிற்கு பின்னால் வைத்துக்கொள்வார்கள். கேரளாவில் கோவிலுக்குச் செல்லும் ஆண் பக்தர்கள் பெரும்பாலும் இவ்வாறு துளசியை தங்கள் காதிற்கு பின்னால் வைத்துக்கொள்வார்கள்.*

*துளசியை காதிற்கு பின்னால் வைத்துக்கொள்வதின் தத்துவம் என்ன?*

**"துளசி"** *மூலிகைகளில் ராணி என அழைக்கப்படுகிறது. மனித உடலில் மிகக் கூடுதல் உறிஞ்சும் சக்தி உடைய பாகம் காதின் பின்புறபகுதி என விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. துளசியை காதிற்கு பின்னால் வைத்துக்கொள்ளும்போது அதன் மருத்துவ குணங்கள் காதின் பின் சருமம் வழியாக ஊடுருவி உடலுக்குச் செல்லும். இதன் காரணமாகவே பழங்காலத்து மக்கள் காதுக்குப்பின் துளசியை சூடிவந்தனர்.*

தொகுப்பு : **செங்கதிரோன்**

## ஔவையார்

# “மூதுரை”

**“மூதுரை”** = *முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால்* **“மூதுரை”** *என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

### வெண்பா – 1

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி**
**“என்று தருங்கொல்?” என வேண்டா - நின்று**
**தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்.**

**பொருள் :** *தென்னை மரம் தன் கால்களில் நீரை உண்டுவிட்டுத் தலையால் இளநீரைத் தரும். அதுபோல ஒருவர் செய்த உதவி நன்றியாகத் தானே வந்து சேரும் என்று தருவார் என்று காத்திருக்கக்கூடாது.*

**விளக்கம் :** *நாம் ஒருவருக்கு ஒரு உதவியைச் செய்தால் அவர் எப்போது நமக்கு உதவி செய்வார் என்று நினைக்கக்கூடாது என்று ஔவையார் கூறுகிறார். அதற்கு அவர் கூறும் உவமை என்ன தெரியுமா?*

*நாம் ஒரு தென்னங்கன்றைநட்டால் அது நின்று நிதானமாக வளர்ந்து பெரிய உயரமாக தென்னை மரமாகும் வரையிலும் அதற்குவிடும் நீரை தன் (கால்) அடிபாகத்தின் மூலம் பருகி பல வருடங்கள் கழித்துத்தான் மற்றவர்களுக்கு இளநீரைத் தருகிறது. இந்த இளநீர் அந்தமரம் வளர்த்த நிலத்திற்கு பயன்படுவதில்லை. அது வேறு ஒருவருக்குத்தான் பயன்படுகிறது. ஆதலால் நாம் ஒருவருக்கு உதவி செய்தால் அவர் நமக்கு எப்போது செய்வார் என்று எதிர்பார்க்க கூடாது. அவர் சில ஆண்டுகள் கழித்து வேறு ஒருவருக்கு உதவி செய்வார்.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *1/63*

**1. திருநீலகண்ட நாயனார் (தொடர்ச்சி)**

*திருநீலகண்டர் ஒரு தாசியிடம் சென்று வந்ததை அறிந்த அவர் மனைவி* **"திருநீலகண்டத்தின் மேல் ஆணை, இனி எம்மைத் தீண்டக்கூடாது"** *என்று கூறிவிட்டார். தாம் செய்த பிழையை உணர்ந்த நாயனார்* **"இனி நான் பெண்குலத்தினர் யாரையும் தீண்டுவதில்லை"** *என்று கூறி அன்று முதல் காம இன்பத்தைத் துறந்து வாழ்ந்துவந்தார். இது வெளி உலகிற்கு தெரியாமல் இருந்தது. இவர்களின் விரதம் நீண்ட நாட்கள் இருந்ததால் அவ்விருவரும் முதுமை அடைந்தனர்.*


*இவர்களுடைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த நினைத்த இறைவன் ஒரு சிவனடியாராக மாறி கையில் ஒரு திருஓடு ஒன்றை எடுத்துவந்து திருநீலகண்டரிடம் "இது கிடைத்தற்கரிய ஓடு, விலை மதிப்பில்லாதது. இதை நீர் பத்திரமாக வைத்திரும். நான் மீண்டும் வரும்போது எம்மிடம் கொடுத்துவிடும்" என்ற கூறிச் சென்றார். நாயனார் அதை பத்திரமாக ஓர் இடத்தில் வைத்தார். ஆனால் இறைவன் அந்த ஓட்டை மறையச் செய்துவிட்டு நாயனாரிடம் வந்து திருஓட்டைத் திரும்பக் கேட்டார். நாயனார் வீட்டில் எல்லா இடங்களிலும் தேடியும் அந்த ஓடு இல்லாததால் சிவனடியாரிடம் வந்து "அந்த ஓட்டைக் காணவில்லை. எம்மை மன்னித்தருளவேண்டும். அதற்கு பதில் வேறு ஒரு ஓடு தந்துவிடுகின்றேன்" என்றார். அதைக்கேட்ட அந்த சிவனடியார் "தாங்கள் கூறுவது உண்மையானால் நீர் உமது மனைவியின் கையைப் பற்றி இந்த குளத்தில்*

மூழ்கி எழுந்து சத்தியம் செய்ய வேண்டும்'' என்றார்.

தர்ம சங்கடமான நிலையை அடைந்த நாயனார் ஒரு மூங்கில் தடியை எடுத்துவந்து ஒரு பக்கத்தைத் தான் பிடித்துக்கொண்டு மறு பக்கத்தை மனைவியைப் பற்றிக்கொள்ள காண்பித்து குளத்தில் மூழ்கப்போனார்.

ஆனால் சிவனடியாரோ "கையை பிடித்துக்கொண்டு மூழ்கினால்தான் நான் நம்புவேன்'' என்றார். இனி ரகசியத்தை மறைத்து பயன்இல்லை என்று உணர்ந்த நாயனார் நடந்தவற்றை சிவனடியாரிடம் கூறி மனைவியின் கைபிடித்து குளத்தில் மூழ்கினார். மூழ்கி எழுந்ததும் அவர்கள் இருவரும் முதுமை மாறி இளமைக் கோலத்துடன் இருந்தனர்.

சிவனடியாரான சிவபெருமான் ரிஷப வாகனத்தில் தேவியுடன் காட்சியளித்தார். நாயனாரும் அவருடைய மனைவியும் இறைவனின் திருவருளைப் பெற்று பேரின்ப வாழ்வை அடைந்தனர்.



தொடரும்...

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## பிறருக்கு உபகாரம் செய்தல்



பிறருக்கு உபகாரம் செய்வதற்கே நமது சரீரம் ஏற்பட்டிருக்கிறது என்பது ஆன்றோர் மொழி.

"பரோபகாரார்த்த இதம் மாற்றம்'' என்பார்கள். தேகத்தில் நல்ல தெம்பு இருக்கிறபோதே, யுவர்கள் சேவை நெறியில் ஈடுபட வேண்டும்.


பிறருக்குச் சேவை செய்வதற்காகவே தேக பலத்தை நன்கு காத்துக்கொள்ள வேண்டும். தேக பலத்தைவிட ஒழுக்க பலம் முக்கியம். நமது மதம் கூறுகிறசாஸ்திர தர்ம நெறியின்படி சுத்தமான வாழ்வு வாழ வேண்டும். இப்படி நாம் தூய்மையாக இருந்தால்தான் பிறருக்கு நல்ல முறையில் சேவை செய்ய முடியும். காமக் குரோதாதிகள் இருந்தால் எப்படி நல்ல முறையில் சேவை செய்வது?

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# தர்மத்தை நிர்ணயிப்பது வேதமே

*வக்கீல் ஒருவர் நீதிபதியிடம் இப்படி வாதாடினார் :*


“மதிப்பிக்குரிய நீதிபதி அவர்களே, என்னுடைய



கட்சிக்காரரைக் குற்றவாளியாகக் கருதக்கூடாது. அவன் திருடியது என்னமோ உண்மைதான். ஆனால் அதற்கு ஒரு காரணம் உள்ளது. அவனுடைய குடும்பம் பட்டினியால் கஷ்டப்பட்டதால் இந்தத் திருட்டை செய்யக்கூடிய நிர்ப்பந்தத்திற்கு அவன் ஆளானான். தான் திருடிய பணத்தை தனக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல் தனது குடும்பத்திற்கும் உதவினான். திருடும் போதும் அவன் வேறு எந்தப் பொருளையும் நாசம் செய்யவில்லை. சொல்லப்போனால், அவன் பூட்டைக்கூட உடைக்காமல் மாற்றுச்சாவியைக் கொண்டு திறந்தான். அந்தப் பணக்காரன் பதுக்கி வைத்திருந்த எண்ணற்ற கருப்புப் பணத்தில் இவன் திருடியது மிகவும் அற்பத் தொகையே. என் கட்சிக்காரன் இந்தக் கருப்புப் பணத்தைக் கண்டுபிடித்ததால், அரசாங்கத்திற்கு பெரிதும் சேவை புரிந்தவனாகவும் ஆகிறான். இவை ஒருபுறமிக்க, அந்தப் பெரிய பணக்காரனிடம் இன்னும் எவ்வளவோ பணம் இருப்பதால், இச்சிறு தொகை இழப்பு அவனுக்கு ஒரு பொருட்டே ஆகாது.”

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்



## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்ற மாத தொடர்ச்சி 3-5 :*

*வேதங்கள் முழுவதையும் கற்கவேண்டும் என்ற விருப்பம், பரத்வாஜ முனிவருக்கு இருந்தது. ஒரு குன்றின் அடிவாரத்தில் குடில் ஒன்றை அமைத்துக் கொண்டு அதிலேயே வசித்து, வேதங்களைக் கற்க ஆரம்பித்தார் அவர். அவ்வாறு 75 ஆண்டுகள் கற்றார். வேதங்களைக் கற்றலும் கற்பித்தலுமே சிறந்த தவமாகும்; ஏனெனில் அதுதான் வேதத்தின் ஞானத்தை சமுதாயத்தில் உயிரோட்டமுள்ளதாக வைத்திருக்க ஒரே வழி எனவே பரத்வாஜரின் தவத்தினால் திருப்தியடைந்த இந்திரன் அவர் முன்னே தோன்றினான். அவன் சொன்னான். "முனிவரே, உங்களுடைய தவம் எனக்குத் திருப்தி அளித்துள்ளது. நான் உங்களுக்கு வரம் ஒன்று வழங்குகிறேன். இப்பொழுது உங்களின் ஆயுள் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால், நான் உங்களுக்கு இன்னும் 75 ஆண்டுகள் ஆயுள் நீட்டிப்பு செய்கிறேன். "பரத்வாஜர் இந்திரனுக்கு நன்றி சொன்னார். இந்திரன் மீண்டும் சொன்னான். "முனிவரே, இப்பொழுது கிடைத்துள்ள நீட்டிக்கப்பட்ட ஆயுளை நீங்கள் எந்த வழியில் செலவிடப்போகிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விழைகிறேன்".*

தொடரும்...



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



"There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!




தனது மகனாய் பாவிக்கும், ராம் சரண் தாயாருக்கு நம்பிக்கையும், ஆறுதலும் கூறுகிறார் நமது நிர்வாக அறங்காவலர்

**புற்றுநோய் என்றால் என்னவென்று தெரியவில்லை ! அது ஏன் தனக்கு வந்தது என்பதும் புரியவில்லை! ஆனால் அது தரும் வலியும், தனது நிலை கண்டு தனது தாய்-தந்தை படும் வேதனையும் புரிகிறது இந்த ஐந்தாம் வகுப்பு படிக்கும் பாலகன் ராம் சரணுக்கு.** இது காலத்தின் கொடுமை இல்லாமல் வேறு இல்லை.

திருப்பூரில் கட்டிட கூலி வேலை செய்து அன்றாடம் பிழைத்துக் கொண்டிருந்த ராம் சரணின் பெற்றோரின் தலையில் இடியாய் வந்து இறங்கியது அவனுக்கு வலது தோள்பட்டையில் புற்றுநோய் என்கிற செய்தி.

சென்னையில் யாரையும் தெரியாது; கணவரும் பிழைப்பை விட்டு விட்டு வரமுடியாது என்கிற நிலையில் ராம்சரணின் சிகிச்சைக்காக தனி ஆளாய் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு வந்த ராம்சரணின் தாய்... இன்று தன் மகனுக்கு நல்லது நடக்கும், அவன் வேதனை தீரும் என்கிற நம்பிக்கையுடன் இருக்கிறார்.




அந்த நம்பிக்கையை அவருக்கு வழங்கியது நமது நம்ம தர்மசாலா. ராம் சரண் விருப்பப்படி தீபாவளி புத்தாடையை அவனுக்கு வழங்கி மகிழ்ந்தார் நமது நிர்வாக அறங்காவலர். இத்தகைய துயரம் இந்த ஒரு ராம்சரணுக்கு மட்டுமல்ல; இவனைப் போன்று எண்ணற்ற ஏழை புற்று நோயாளிகள் நம்ம தர்மசாலாவில் தங்கி அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகின்றனர். அவர்கள் அனைவருக்கும் நம்ம தர்ம சாலாவில் தங்குமிடம்; மூன்றுவேளை உணவு **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தடையற்ற சிகிச்சை பெற்று விரைவில் நலம் பெறுகிறார் கள். இத்தகைய **ஏழை புற்றுநோயாளிகளின் உயிர் காக்கும் உயரிய சேவைக்கு தாராளமாக உதவிடுங்கள். உண்மை யான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்.**

---

செங்கல்பட்டு - மாமண்டூர் கிராமத்தில், ஆதரவற்ற ஏழை முதியவர் களுக்காக நாம் செயல்படுத்தவிருக்கும் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிட அனுமதி வழங்குவதற்காக நமது நிலத்தில் துறை சார்ந்த அதிகாரிகளின் நேரடி ஆய்வு நிறைவடைந்துள்ள நிலையில், துறை சார்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்களின்படி கட்டிட அனுமதிக்கான கட்டணமாக சுமார் 20 லட்சம் ரூபாய் முறையாகவும், முழுவது மாகவும் 17.8.2022 அன்று செலுத்திவிட்டு, கட்டிட அனுமதிக்காக இன்றுவரை காத்திருக் கிறோம். அதன்படி, கட்டிட அனுமதி கிடைக் கப்பெற்றவுடன் நமது இலவச முதியோர்



இல்ல கட்டிட பணிகள் முழு வீச்சுடன் நடைபெறும். வறுமையில் வாடும் ஏழை முதியவர்களுக்காக **முற்றிலும் இலவசமாக** செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள நமது முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு **ரூ.5,00,000/-** வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குவோரின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**சந்திப்பீர்! செயலாற்றுவீர்!!**




**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

• ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் • ரூ.75,000/- நிதியளித்து புரவலர் ஆகலாம் • ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம் • ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் • ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் • ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, (next to Harini Skin & Laser Clinic) Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**
**vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org**



Rs. 1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 23

"பெற்றோர்களே கவனியுங்கள்'' இரண்டாம் பாகத்தில் இதை எழுதியிருக்கிறேன் என்றாலும், மீண்டும் ஒருமுறைஉங்கள் கவனத்திற்காக மறுபதிப்பு செய்யுமாறு "வேதபாரதி'' ஆசிரியர் குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேதத்தில் குறிப்பிட்டுள்ள 64 கலைகள், இறைவி காஷ்மீர வாசினி, பிரம்மதேவனின் பத்தினி என்று நாம் பூஜிக்கும் ஸ்ரீ சரஸ்வதி தேவியின் அருளிருந்தால்தான் கிடைக்கப் பெறும்.

அதில் வெகு சிலரின் மீது அவளது கடைக்கண் பார்வை பட்டால், அவர்கள் 8வித திறன்கள் பெற்று "அஷ்டாவதானி'' என்று அழைக்கப்படுகின்றார்கள்.

இதை அடிப்படையாக வைத்து தானே, மனித மூளை எட்டுவிதத் திறன்கள் உள்ளடக்கக்கூடியது என்று ஆங்கில மருத்துவ உலகம் கூறுகின்றது?

இதை விரிவாக கொரோனா காலகட்டத்திற்கு முன்பு, கோயம்புத்தூரில் நடந்த "யுவஸ்ரீ – ஸ்வதர்மஸ்ரீ'' கூட்டத்தில் பேசியுள்ளேன்.

- Bodily Kinesthetic Intelligence – உடற்கூறு சார்ந்த திறன்.
- Musical Intelligence – சங்கீதத்திறன்.
- Linguistic Intelligence – மொழித்திறன்.
- Logical Mathematical Intelligence – கணக்கு மற்றும் விஞ்ஞானத்திறன்.
- Naturalist Intelligence – இயற்கை சார்ந்த அறிவுத்திறன்

- Interpersonal Intelligence – *தன்னையறிதல்.*

Spatial Intelligence – *இடத்தின் அளவைப் புரிந்து கொள்ளும் திறன்.*

*இந்த எட்டு திறன்களும் ஒரே மனிதனிடம் இருக்கவியலாது என்பதால், ஸ்ரீ சரஸ்வதி தேவியின் அருளால் ஏதாவது ஒரு திறன் பிறவிலேயே ஒரு குழந்தைக்குள் இருக்கும். அதை கண்டுபிடித்து, 10-ம் வகுப்பு வரை ஊக்குவிக்கும் பெற்றோர், பிறகு மார்க், பட்டம், பணி, சம்பளம் என்று செல்லும் பொழுது திறன் மறக்கடிக்கப்படுகிறது. ஏதோ ஒரு காலகட்டத்தில் வெறுப்பும், கோபமும் சூழ்வதை உணர்ந்தவர்களாக மாறி, குழந்தைகள் தாம் படித்த படிப்பை விடுவதுண்டு.*

*“கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*

*மாறாநீர் வையக்கும் அணி” – (அதிகாரம் – 71 குறள் – 701)*

*“வாய் வார்த்தைகளால் சொல்லிக்கொள்ள முடியாத நிலையிலுள்ள ஒருவருடைய முகக்குறிப்பை கொண்டே, அவருடைய விருப்பத்தையறிந்து அதன்படி நடந்து கொள்ளக்கூடிய ஒருவன் எக்காலத்திலும் உலகத்தை கடல் சூழ்ந்திருப்பது போன்றே, இச்சமூதாயத்திற்கு என்றும் ஓர் ஆபரணமாக இருப்பார்” என்று ஒருவருடைய விருப்பத்தை எப்படி அறிந்து கொள்வது என்று கூறுகிறார் வள்ளுவர்.*

*இனி, இத்திறன்களை பெற்றோர்கள் கூர்மையாக கவனித்து வழிநடத்த கீழ்கண்டவை உதவும்.*

*உடற்கூறு சார்ந்த திறன் : நடனம்,*

விளையாட்டுத்துறை, ஜிம்னாடிக்ஸ் என்று இவர்களது விருப்பம் செல்லும்.

சங்கீதத்திறன் : கர்னாடக சங்கீதம் மட்டுமல்ல, சங்கீதத்தை சார்ந்த அனைத்து விஷயங்களும் இவர்களுக்கு பிடிக்கும்.

மொழித்திறன் : எழுத்து, கவிதை, படித்து பல தகவல்களை சேகரிப்பது. அவற்றைப் பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் என்று இவர்களது ஆர்வம் செல்லும்.

கணக்கு மற்றும் விஞ்ஞானத்திறன் : இது குழந்தைகளிடம் இருந்துவிட வேண்டும் என்பதுதான் பெற்றோர்களின் ஒரே குறிக்கோள்.

இயற்கை சார்ந்த அறிவுத்திறன் : சுற்றுப்புறச்சூழல், மரம், காடு என்று இவர்களது ஆர்வம் செல்லும். “தாவரவியல்” (Botany) மற்றும் உயிரியல் (Zoology) இவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

புரிதல் : மற்றவர்களைப் புரிந்து கொள்ளும் இத்திறன், அரசியல், ஊக்கப் பேச்சாளர்கள், சைக்காலஜி ஆசிரியர்கள் ஆகியோரை உருவாக்கும்.

தன்னையறிதல் : குருமார்கள், சிறந்த தலைமை குணம் கொண்டவர்கள் என்று உருவாக பெரும் வாய்ப்புள்ளது.

இடம் அதன் அளவைப் புரிந்து கொள்பவர்கள் : இவர்கள் “ஆர்கிடெக்ஸர்”, “டிசைனர்கள்”, “கிராஃபிக்” திறனாளிகள், “சிவில் இன்ஜினீயரிங்” என்று இவர்கள் உலகம் பெரிது.

டாக்டர்.பூர்ணிமா உங்களுக்கு கற்பித்த வலது, இடது மூளைப் பற்றிய விவரங்களோடு பொருத்திப் பார்த்து உங்கள் குழந்தைகளை வழிநடத்துங்கள்.

தொடரும்...

## எண்ணமே வாழ்க்கை

*சென்றமாத தொடர்ச்சி....*

*உடனே டாக்டர், நர்ஸ் செல்வியிடம் ஸ்டேட்டஸ் விசாரித்தார்.*

*"செக் பண்ணி சொல்றேன், டாக்டர்" என செல்வி மீண்டும் கூறினார்.*

*"நீங்க டிஸ்சார்ஜ் ஆயிடலாம் சண்முகம்" என டாக்டர் கூறினார். அரை மணி நேரம் கழித்து அந்த இடத்திற்கு நர்ஸ் செல்வி வர, மறுபடியும் அந்த இளைஞனைப் பற்றி விசாரித்தார்.*

*'என்ன சார் உங்களோட பெரிய ரோதனையா இருக்கு. காலைல இருந்து எத்தனை கேஸ் பார்த்திட்டு இருக்கேன். இங்க இருந்து ஐ.சி.யு பக்கம் போகவே நேரமில்லை. நீங்க பாட்டுக்கு கிளம்புங்க டிஸ்சார்ஜ் ஆயிட்டு, இங்கேயே இருந்திட்டு இருக்க கூடாது".*

*நேரம் கடந்தது, இரவு எட்டு மணியளவில் டாக்டர்.ஜெயராமன் மேற்பார்வை செய்ய வந்தார். சண்முகம் காரிடாரில் அங்கும் இங்கும் கட்டு போட்ட காலோடு அலைவதைக் கண்டவர்,*

*"சார் ஏன் நீங்க இங்க இருக்கீங்க, என்ன தேடறீங்க? உங்க ஃபைல காட்டுங்க"*

*சண்முகம் ஃபைல நீட்ட*

*'சார் நீங்க நாலு மணிக்கே டிஸ்சார்ஜ் ஆயாச்சே, இன்னும் என்ன பண்றீங்க".*

*"டாக்டர், ஒரு இருபது வயது இருக்கும் அந்த பையனுக்கு, காலைல பைக் ஆக்சிடெண்ட் ஆயிடுச்சு. இங்க தான் கூட்டியாந்து உட்டேன். பையன் பொழைச்சுட்டானானு தெரியல.*

*"காலைல எத்தனை மணிக்கு வந்தீங்க. நீங்க*

டிராஃபிக் போலீஸ் தானே''

ஆமா டாக்டர் சார், சுமார் ஒன்பதரை மணி இருக்கும். temporary போஸ்டிங் சார், கவர்மென்ட் இல்லை''.

"சரி சார், இருங்க நான் செக் பண்ணி சொல்ல சொல்றேன்."

எதேச்சையாக சிஸ்டர் செல்வி அந்த வழியாக வர, டாக்டர்.ஜெயராமன் இன்னொரு பக்கம் நகர்ந்து ஃபோனில் விசாரிக்க ஆரம்பித்தார்.

நர்ஸ் செல்வி,

''என்னையா, இன்னுமா இங்க இருக்க. இப்பதான் ஐ.சி.யுல கேட்டுட்டு வரேன். அந்தப்பையன் பொழச்சிகிட்டான். அவங்க அம்மா அப்பால்லாம் வந்துட்டாங்க. ஒன்னும் ஆபத்து இல்லைனு சொல்லிட்டாங்க. இப்ப திருப்தி ஆச்சா கிளம்புயா, உங்க வீட்ல இருந்து யாரும் வரலையா'' என நர்ஸ் கூற

"அப்பாடா, அந்த பையனுக்கு சின்ன வயசு, மனசே வரலை. எனக்கும் ரெண்டு பசங்க இருக்காங்க சிஸ்டர். நான் என்ன என் புள்ளைங்களுக்கு காரும், மோட்டர் பைக்குமா வாங்கி தர முடியும். ஏதோ அப்பா ஒரு உயிரை பிழைக்க வச்சிருக்காருனு இன்னைக்கு நடந்ததைசொன்னா அவனுங்களுக்கு தோணுமில்லை. அந்த நினைப்பு வர கொஞ்சநேரம் நான் அவங்களுக்கு பெரிசா தான தெரியுவேன். சொத்து சொகம்லாம் சேர்ந்து வைக்க தெரியலமா, ஏதோ இது மட்டும் தான் நமக்கு தெரியும். இந்தத் தொழில், அதுல இன்னைக்கு நல்லது பண்ண கிடைச்சது அவளோதான்.

"சரி தான் யா, நல்ல மனுசன் தான் நீ, எனக்கு தான் கொஞ்சம் வேலையாப் போச்சு இன்னைக்கு. சரி

இப்பவாது கிளம்பு".

சண்முகத்தின் சொற்கள் டாக்டர்.ஜெயராமனின் மனதை ஏதோ செய்தது. தன்னுடைய தந்தை எத்தனையோ பிரச்சனைகளுக்கு நடுவில் இந்த மருத்துவமனையை பல வருடங்கள் நடத்தியுள்ளார். அவரின் மனதில் தான் நடத்தும் சேவையின் பேரில் மலையளவு நம்பிக்கை வைத்திருந்தார். அந்த நம்பிக்கை அவரை வழிநடத்தியுள்ளது. ஜெயராமன் எங்கேயோ அந்த நம்பிக்கையை தொலைத்து விட்ட உணர்வு வந்தது. பல நாட்கள் கழித்து. ஆனால் இன்று, ஒரு எளிய தந்தையின் அன்பும், நம்பிக்கை வார்த்தைகளும் அவருக்கு அமுதமாய் ஒலித்தது.

முற்றும்.

**V. சிவசங்கரி**



# ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை

**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபல் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளுவர் - 602 023

**8940224744 / 9363111799**

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## ஸ்ரீ சிவபிருந்தாதேவி – 3-ம் பகுதி

## பாரத தேசத்தின் முதல் பெண் ஆதீனம்

### ஆர்.பி.வி.எஸ். மணியன் அவர்களின் பார்வையில்

### தவத்திரு சிவபிருந்தா தேவி அவர்கள்

*ஆர்.பி.வி.எஸ். மணியன் அவர்கள், ஸ்ரீ சாயிமாதா சிவ பிருந்தாதேவி அவர்களைப் பற்றியும், இந்துக் கோவில்கள் மீட்பு, பராமரிப்பு, புனரமைப்பு சம்மந்தப்பட்ட அன்றைய நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்ததை (பதிவு செய்யப்பட்டது) இங்கே தருகிறேன்.*

*“விஷ்வ ஹிந்து பரிஷத் மூலமாக, ஆலயங்கள் பாதுகாப்பு, புனரமைப்பிற்கான ஒரு அறவழிப் போராட்டப் பேரவை ஒன்றைஆரம்பித்தோம். அதில் ஒரு உறுப்பினராக ஸ்ரீ சாயிமாதா பிருந்தாதேவி இருந்தார்கள். அது சம்மந்தமான சந்திப்புக் கூட்டங்கள், நிகழ்ச்சிகள், மாநாடுகள் அனைத்திலும் ஈடுபட்டார்கள். அவ்வாறேஆலயங்களை அரசாங்கத் திடமிருந்து மீட்பு மற்றும் ஆலய பாதுகாப்பு, புனரமைப்பு பற்றிய விழிப்புணர்வு யாத்திரை ஒன்றை* **“குமரி முதல் கோட்டை வரை”** *– 1000 கி.மீ. ஆன்மீகப் பாதயாத்திரை (1988) ஒன்றைமேற்கொண்டோம். இப்போது மதுரை ஆதீனமாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறாரே அவருடைய பெயர் சுந்தரமூர்த்தி தம்பிரான். அப்போது அவருக்கு 30 வயதிருக்கும். எங்களுடன் முழுக்க நடந்தவர் அவர்தான். காலணி அணியலாம் என்று சொல்லியிருந்தும் அவர் காலணிகள் எதுவும் அணியாமலே, முப்பது நாட்களும், வெறும் காலோடு நடந்து வந்தார் என்றால் அவரின் தீவிரம் புரிந்து கொள்ளுங்கள். இதன் மூலம் அரசியல்*

கட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்தோம். அதன் காரணமாக தங்கள் தேர்தல் அறிக்கைகளில், அனைத்துக் கட்சிகளும், ஆலய மீட்பு, புனரமைப்பு, பற்றி தேர்தல் வாக்குறுதிகளை இடம்பெறச் செய்திருந்தார்கள். அரசியல் வரலாற்றிலேயே கோவில்களைப் பற்றிப் பேசியது (1989) அதுதான் முதல் முறை.

முதல்வர் பதவியேற்ற, வி.என். ஜானகி அவர்கள், நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்றதை அடுத்து, மீண்டும் தேர்தல், காங்கிரசின் தலைவராக திரு.மூப்பனார் அவர்கள் இருந்தார்கள். தங்கள் தேர்தல் அறிக்கையில், நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆலயங்களை அரசாங்கத்திடமிருந்து விடுவிப்போம் என்று விளம்பரமே கொடுத்திருந்தார். அப்போது நான் ஒரு புத்தகம், ஒரு லட்சம் பிரதிகள் அச்சிட்டு வினியோகித்திருந்தேன். அது "ஆலயம் காக்க அறவழிப் போராட்டம்" என்ற தலைப்பில் 1920-ல் இதற்கான சட்டங்கள் எவ்வாறு ஏற்பட்டன, இந்த சட்டங்களுக்கு முன்னால் எவ்வாறு இருந்தது, அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலேய அரசாங்கம் ஆலயங்களை எப்படி கைப்பற்றின, நீதிக்கட்சி ஆட்சியில் என்ன நடந்தது? 1951-ல் சட்டம் என்ன சொல்லியது? பிறகு திமுக ஆட்சிக்கு வந்த பிறகு என்ன பிரச்சனைகள் ஆயிற்று என்று விவரமாக கூறியிருந்தேன். 84 பக்கங்களைக் கொண்டது. இதனால் மக்களிடையே இதுபற்றி ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருந்தது.

தொடரும்..

*ஸ்ரீ மாத்தம்மா சரணம்*

# ஆலயம் செய்வோம் வாருங்கள்



“கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்று நம் முன்னோர்கள் சொன்னதை, சற்றேமாற்றி “கோவில் இல்லாத மதத்தில் குடியிருக்க வேண்டாம்” என்று முடிவெடுத்து விட்டார்கள் இன்றைய தலைமுறையினர் ஒரு அழகிய கிராமத்தில் “எங்கள் குல தெய்வம் ஸ்ரீ மாத்தம்மாவுக்கு சிறு கோவில் கட்டித்தாருங்கள், எங்கள் பிள்ளைகளை அவள் காலடியிலேயே இருக்கச் செய்யுங்கள். எங்கள் கண்கள் மூடுவதற்கு முன்பாக எங்கள் தெய்வம் இங்கே குடியேறவேண்டும். கருணை காட்டுங்கள்” என்று கண்கள் கலங்கிய மூதாட்டிகள் கையெடுத்து கும்பிட்டுக் கேட்கிறார்கள். சுற்றிலும் அந்த ஊர் இளைஞர்கள்.

**“சீதா ராம் பேட்டை**, ஊத்துக்கோட்டை அருகே அழகிய கிராமம். கோவில் இல்லாத குடியிருப்பு, சமூகப் பிரச்சனைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட, மிகவும் பின்தங்கிய மக்களின் நியாயமான கோரிக்கை. அந்த மாத்தம்மாவையே வேண்டிக்கொண்டு, சில நல்ல நண்பர்களுடன் இறங்கிவிட்டேன். இந்த பொது கைங்கர்யத்தில் உதவ மனம் கொண்டவர்கள் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஷ்யாமா ஸ்வாமிநாதன்,**

*போன் : 2447 0651, செல் : 9941387193*

# தருவின் நிழலில்

"மனிதர்களின்றி மரங்கள் உண்டு

மரங்களின்றி மனிதர்கள் இல்லை"

விருட்சங்கள் இயற்கையின் ஆன்மாக்கள். பலர் மரத்தினடியிலேயே ஞானம் பெற்றிருக்கிறார்கள். ஞானம் மட்டுமின்றி மகா காவியமான வால்மீகி இராமாயணம் உருவானது "மரா" மரம் என்றஉச்சரிப்பினிலே. திருமூலர் திருமந்திரத்தை மரத்தடியில்தான் உருவாக்கினார். புத்தரும் மரத்தடியில்தான் ஞானம் பெற்றார். இவ்விரண்டுமே அரச மரமாகும்.

நம்மாழ்வார் புளியமரத்தடியிலிருந்து இப்பூவுலகிற்கு தேவையான ஞானத்தை அருளிச் செய்தார். திவ்யமான திருக்கோவில்கள் ஒவ்வொன்றிலும் மரங்களின் அருட்கொடை முக்கியமானதாகும். கோவில் தல வரலாற்றில் மரங்களின் வரலாறும் முக்கிய இடம் பெறுகிறது. பெரும் சக்தி பெற்றுள்ள மரங்களை பாதுகாக்க வேண்டியும் அவற்றைபோற்றித் துதிக்க வேண்டியும் நம் முன்னோர்கள் பெரும் வழிகளை காட்டிச் சென்றுள்ளனர். அதிலும் அரச மரத்திற்கு அதிக முக்கியத்துவம் வைத்துள்ளனர்.

அனைத்துலகிலும் உள்ள மரங்கள் அனைவற்றிற்கும் ராஜாவாக திகழ்வதால் இதனை "அரசன்" என்றழைக்கின்றனர். அந்த மர அரசனை (வீருக்ஷராஜாவை) அறிவோம்.

உலக உயிர்களுக்கெல்லாம் தான் நிழலாக நின்று அமுத சுரபியாக பல வகைகளிலும் ஆதாரமாக விளங்குவதனாலும், பலவற்றைதருவதனாலும் "தரு" என பொதுவாக மரங்களை தமிழ் சங்க இலக்கியங்கள் அழைக்கின்றன.

*மரங்களை குறிப்பாக அரசினை காக்கும் பொருட்டு மக்கள் வாழும் பகுதிகளில் அரசு மரத்தடியில் விநாயகப்பெருமானை பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றனர் மக்கள், அரச மரத்தின் வேர்ப்பகுதியில் அதாவது அடிப்பகுதியில் படைக்கும் தொழில்புரியும் ப்ரம்மாவும் உச்சியில் அதாவது மேல்பகுதியில் சிவபெருமானும் மையப் பகுதியில் மஹா விஷ்ணுவும் வசிக்கின்றனர்.*

**மூலதோ ப்ரும்ம ரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபிணே**

**அக்ரதோ சிவ ஸ்வரூபாய விருக்ஷ ராஜாயதே நம:**

*என்று விளிக்கிறது வேதம். முப்பெரும் தொழில்புரியும் மூவேந்தர்களும் (மும்மூர்த்திகளும்) உறையும் மரமாகும்.*

*தமிழ்நாட்டின் திருமண சடங்குகளில் "அரசாணிக்கால்" எனும் அரசங்கொத்தினை சாட்சியாக வைப்பது வழக்கமாகும். ஆண் மகனின் பரம்பரை வளர, வம்ச விருத்திக்காகவும் அதன் வழியில் புவியில் தர்மங்கள் காப்பதற்காக செய்யப்படுவதே திருமணம். அதற்காக பெண்ணை பெற்றெடுத்த பெற்றோர் தன் மகளை "கன்னிகாதானம்" செய்து கொடுக்கின்றனர், இந்த கன்னிகாதான சடங்கின் போது தாரை வார்த்து தரும் முன்பு சனாதன தர்மத்தின் முப்பத்து முக்கோடி (33 கோடி) தேவர்களையும், அக்னி பகவானையும் சாட்சியாக வைத்தே கொடுக்கின்றனர். அப்போது "அரசாணிக்கால்" சாட்சியாகவும் என்னும் வரிகள் வருஷத்தின் வலிமையையும், தெய்வீகத் தன்மையும் உணர்த்துகிறது.*

*-தொடரும்...*

## தி நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட்

http://www.newlifecharitabletrust.org






ஒவ்வொரு நாளும் வயதான மற்றும் நோய்வாய்ப்பட்ட மாடுகள் கைவிடப்பட்டு அலை பிளாஸ்டிக், காகிதம் போன்றவைகளை உண்டு வேதனையான வாழ்க்கை வாழ்கின்றன.

மனிதர்களுக்கு பால் கொடுத்து வந்த புனிதமான பசுக்கள் இப்படி துன்பத்துக்கு ஆளாகலாமா?

நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட் (NLCT) இது போன்ற நிராதரவான பசுக்களை மீட்டு எங்கள் **லெக்ஷ்மி நிவாஸ்** கோசாலையில் பாதுகாத்து பராமரித்து வருகிறோம்.

தற்போது எங்களிடம் 95 பசுக்கள் உள்ளன.

கோசாலையிலிருந்து பால் அருகில் இருக்கும் வேத பாடசாலை மற்றும் கிராம குழந்தைகள், பெரியவர்களுக்கு கொடுக்கிறோம், விற்பனை செய்வதில்லை.

கோசாலை பராமரிப்பிற்கு 5 ஆண்கள், 2 மகளிர், தீவனம், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகள் நன்கொடை மூலமாக கிடைக்கின்றன. கோசாலை பராமரிப்பிற்கு உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

நன்கொடையை கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு காசோலையாகவோ, ஆன்லைன் மூலமாகவோ செலுத்தலாம்.

**City union bank**
East Tambaram Branch,
Chennai -600059
SB Account No: 500101010797410
IFSC Code: CIUB0000431

Scan the QR Code to make payment thro Google Pay

அனைத்து நன்கொடைகளுக்கும் 80G கீழ் வரி விலக்கு உண்டு. FCRAவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தொடர்பு - திருமதி. தீபகலா : +91 98841 71172, 044 - 22399551, 43574464

+91 98841 71172 Office@newlifecharitabletrust.org

எங்கள் கோசாலாவிற்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## இராமாயணம் வாழ்வியல்

எம்பெருமான் நாராயணனே வீரமும் தியாகமும், கருணையும், அன்பு, பண்பு கொண்ட அயோத்தி நகரில் அவதரிக்க வேண்டும் என்று நினைத்தார் என்றால் அதன் பெருமையை என் என்பது. மேலும் தசரதர் மகனாகப் பிறக்க வேண்டும் என்று தீர்மானம் செய்ததால் அவரது மகிமையை என்னவென்று சொல்வது.

விவசாயம்தான் பொருளாதாரத்தின் ஆதாரம், அதுதான் முதுகெலும்பு. சரயு நதிபாயும் அயோத்தியில் விளைச்சலுக்கு குறைவே இல்லை. ஒரு நாடு சிறக்க வேண்டும் என்றால் அந்நாட்டு மக்கள் மனவளம் மிக்கவர்களாக இருத்தல் அவசியம். மகளிர் கலைத்துறையில் சிறந்து விளங்கினார்கள். பெண்கள் காரணமாக அறம் தழைத்தோங்கியது. அவர்களது கற்பின் மகிமையால் மாதம் மும்மாரி மழை பெய்தது.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பதற்கு இணங்க மனிதனாகப் பிறந்தவன் தனது சீரிய நடத்தை, பண்பு ஆகியவைகளால் உயர்ந்து நின்று அதன்படி வாழ்ந்து எல்லோருக்கும் நல்வழி காட்டிக் கொண்டிருந்தால் அவன் தெய்வநிலையை எய்துகிறான். தெய்வத்திற்கு சமமாக மதிக்கப்படுகிறான். திரேதாயுகத்தில் பிறந்த இராமாயண காவியம் ஒப்பற்றது. அதில் வரும் பாத்திரங்கள் ஒப்பற்றமனிதர்கள். ஒரு அரசன் ஒரு தந்தை எப்படி வாழவேண்டும் என்பதற்கு இலக்கணமாக இருந்தவன் தசரதன். சகோதரர்கள் எப்படி அன்புடன், பாசமுடன், பிணைப்புடன் உறுதியாக இருந்தார்கள் என்பதை பல சம்பவங்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. ஒரு நண்பன், ஒருசேவகன் மற்றும் உயிரினங்களிடம் மனித

நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எதிரிகளிடம் கூட எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை யதார்த்தமாக காட்டும் உத்தம காவியம் இராமாயணம்.

ஒருவன் பிறப்பினால் உயர்நிலையை அடைவதில்லை. அவன் பெற்றபண்புநலன்கள், அவனிடம் உள்ள நல்ல நடத்தை மூலம் உயர்ந்தவன் ஆகிறான். உதாரணம் இராமாயணம் இயற்றிய வால்மீகி முனிவர், ஒரு வழிப்பறி கொள்ளைக்காரராக இருந்தார். இவரது கைவரிசையை நாரத முனிவரிடமே காட்டினார். குடும்பத்திற்காக இத்தகைய தீயசெயல்களைச் செய்வதால் பாவம் உன்னைச் சூழ்ந்துகொள்ளும். இதில் அவர்கள் யாரும் பங்கெடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்று நாரதர் கூறஇதைக்கேட்ட இரத்தினாகர் என்றவால்மீகி சிந்திக்கத் தொடங்கினார். இதிலிருந்து நான் வெளியே வர என்ன வழி என்று நாரதரிடமே கேட்டார். நாரதர் அவருக்கு இராம நாமத்தை உபதேசம் செய்து தொடர்ந்து அதை மனனம் செய்யக் கூறினார். அவர் தொடர்ந்து பல ஆண்டுகளாக இராமநாமத்தை ஜபம் செய்து வால்மீகி முனிவர் என்றநிலையை எட்டினார். அவர்தான் இராமாயண காவ்யத்தை எழுதியவர். இராம நாமத்திற்கே ஒரு மகிமை உண்டு. “ரா” என்றவார்த்தையை உச்சரிப்பதால் உள்ளே இருந்து பாபம் வெளியேறுகிறது. “மா” என்றவார்த்தையை உச்சரிப்பதால் வெளியில் இருந்து பாபம் உள்ளே வருவதில்லை. இராமாயணத்தில் பலதரப்பட்ட பாத்திரங்கள் – குகன், சுக்ரீவன், சபரி, ஹனுமன், விபீஷணன், ஜடாயு, ஜாம்பவான் ஆகியோர்களை வழிநடத்தியது ஸ்ரீராமன்தான்.

தொடரும்...

**காந்தாமணி நாராயணன்**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier



**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# கண்டனூர் அருள்மிகு செல்லாயி அம்மன் திருக்கோயில் உரைச் சித்திரம்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*"திருவே! விளைந்த செந்தேனே! வடியிட்ட தெள்ளமுதின்
உருவே! மடப்பிள்ளை ஓதிமமே! ஒற்றை ஆடகப் பூந்
தருவே! நின் தாமரைத் தாளே சரணம் சரணம் கண்டாய்
அருவே! அணங்கரசே, செல்லாயி அம்பிகையே!*

பரம்பொருள் சிவம் என்றும் சக்தி என்றும் இரு கூறுகளாக அமைந்து நமக்கு அருள் பாலிக்கிறது. சிவத்தைப் பொருள் என்றும், பராசக்தியை ஆற்றல் என்றும் கூறுவர்.

பொருள் எனச் சுட்டப் பெறும் சிவபுரம் பொருள்தான் வழங்கவிருக்கும் வற்றாத பேரின்பத்தைத் துய்ப்பதற்குரிய தகுதிகளாகிய இருவினை ஒப்பு, மலபரிபாகம், திருவருட்சக்தி பதிவு, ஆகியவற்றைத் தன்னைப் பரியாத ஆற்றலாகிய பராசக்தியின் மூலம் நம்மிடையே உண்டாக்குகிறது. இவ்வகையில் சக்தி நமக்கு முன்சுரக்கும் இன்னருளாய் விளங்குகிறாள்.

இத்தகைய சக்தி அன்னையை வியந்து போற்றிட எழுந்த திருத்தலங்களுள் ஒன்றுதான் கண்டனூர் அருள்மிகு.செல்லாயி அம்மன் திருக்கோவில்.

பெருமைவாய்ந்த இத்தலம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலிருந்து புதுவயல் செல்லும் சாலையில் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கண்டனூர், வேலங்குடி, கோட்டையூர், வடகுடி, மணச்சை, பள்ளத்தூர், கொத்தரி ஆகிய ஏழு ஊர்களில் வாழும் நகரத்தார்களுக்கும் நாட்டார்களுக்கும் பொதுவான திருக்கோவில் இது.

சூரபன்மாவின் படைத்தளபதிகளுள் ஒருவனாகிய

கண்டன் என்பவனின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி இவ்வூர் என்பதால் கண்டனூர் எனப்பெயர் பெற்றது.

இவ்வசுரனின் கொடுமையை அழித்திட அன்னை சக்தி இவ்வூரில் அமைந்தவையக்கரை என்னும் பகுதியில் குழந்தை வடிவாகத் தோன்றினாள். தன் ஆற்றலால் அசுரனை அழித்துவிட்டு வையக்கரையில் உள்ளகருப்பர் கோவில் அருகே குழந்தையாய்க் கிடந்தனள்.

அனைவரும் கூடித் தேவியின் குழந்தை வடிவைத் தரிசித்தனர். அப்போது குழந்தை வடிவில் இருந்த தேவி மரப்பாச்சி வடிவினளாய் தன்னை மாற்றிக்கொண்டாள். அனைவரும் அம்மரப்பாச்சி வடிவில் அமைந்த அன்னையைத் தம் செல்வமெனக் கொண்டாடி வைகைக்கரையில் இருந்து எடுத்து வந்து நகரின் நடுவே கோவில் அமைத்து வழிபட்டனர். செல்வமாய்த் தாம் கொண்டாடும் அன்னைக்குச் செல்வநாயகி எனப்பெயரிட்டு வணங்கினர். அப்பெயரே ‘செல்லாயி’’ என மருவித் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

தொடரும்...




## லிகித ஜபம்

இறைவனின் பேரருளை பெற பல்வேறு மார்க்கங்களை நம் புராணங்களிலும், சாஸ்த்தரங்களிலும் கூறப்பட்டு இருந்தாலும் தற்போதைய அவசர உலகில் நேரமின்மை, மற்றும் பல அலுவல்கள் என்ற போர்வையில் நாம் பல வழிபாடுகளை மெது மெதுவாக இழந்து அல்லது தவிர்த்து வருகிறோம். இதனாலோ அல்லது வேறு பல சூழ்நிலைகளாலோ மன உளைச்சல், பலவித நோய்கள், குடும்பத்தில் குழப்பங்கள் என்று எங்கு நோக்கிலும் மனித குலம் அவதிப்பட்டுக் கொண்டு வருகிறது. இத்தகைய அவதிகள், சீற்றங்களிலிருந்து நம்மை காத்துக் கொள்ள பகவானும் அவ்வப்போது நமக்கு நல் உபாயங்களை காட்டிக் கொண்டு தான் வருகிறார். அதில் ஒன்று நாம ஜபம் மிகப் பிரபலமாகவும், சக்தி வாய்ந்ததும் ஆன 'ராம' ஜபம் எழுதுவது நம்மில் நிறைய பேருக்கு தினப் பழக்கமாக இருக்கலாம். அதுபோலவே மற்றுமொறு சிறந்த ஜபம் தான் "நாமத்ரய ஜபம்" உண்மையில் இது நம்மை காக்கும் ஒரு அஸ்தரம் (ஆயுதம்) தீய நோய்களையும், எதிர்மறை சக்திகளையும் எதிர்த்துப் போராடும் ஒரு மாபெரும் அஸ்தரமாக இந்த ஜபம் செயல்படுகிறது. அதாவது பாதுகாக்கிறது. ஜயம் கொடுக்கும் இந்த ஜபம் எழுதுவது வெகு எளிமை.

**அதி சக்தி வாய்ந்த வார்த்தைகளாகவது :**

**அச்யுதாய நம : அனந்தாய நம : கோவிந்தாய நம :**

இந்த லிகித ஜபம் எழுதி பயன்பெற்றவர்கள் ஏராளம். தங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு, திருமணங்களுக்கு, நோய்களிலிருந்து விடுபட மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த புத்தகம் இலவசமாகவும் வழங்கப்படுகிறது.

இந்த லிகித ஜெப புத்தகம் வேண்டுவோர் அனுகவேண்டிய **தொலைபேசி எண்.9345725265.**

★ அடக்க விலை ரூ.30/- பணம் கொடுக்க விரும்புபவர்கள் G-Pay No.9345725265 என்ற எண்ணில் அனுப்பலாம்.


திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940


Find Your Partner
Best of Luck
Brahmin Kalyanam.com
BK MATRIMONY.com
An Auspicious Begining...
(Exclusive Portal for Brahmins)
பிராமணர்களுக்கு மட்டும்
Register & Get
Brides / Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
Membership Fees Rs.2000 only
Astro Guidance By:
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com

## புதுச்சேரி வேதபாரதி தீபாவளி கொண்டாட்டம்

மஹா பெரியவா அருளால், ஸ்ரீ சங்கர சேவா சங்கம் மற்றும் வேதபாரதி (புதுச்சேரி) இணைந்து 24.10.2022 அன்று புதுச்சேரி மத்திய சிறைகைதிகளுடன் தீபாவளி கொண்டாடப்பட்டது. மஹா பெரியவா ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின், ஆக்ஞையான, அனைத்து உயிரினங்களுக்கிடையில் அமைதி, அன்பு மற்றும் நல்லிணக்கத்தைப் பேணுதல் என்று சாஸ்வதமான உண்மையை நாங்கள், கைதிகளுக்கு எடுத்துரைத்தோம். புதுச்சேரியைச் சேர்ந்த சிறைக் கைதிகளுக்கு இந்தச் சேவையை வழங்குவதற்காக அனுமதி அளித்த புதுவை அரசுக்கு நன்றிகள் பல. இந்த சிறைவளாகத்தை நல்ல முறையில் பராமரித்து, காய்கறி மற்றும் மலர் தோட்டங்களுடன் சிறந்த இணக்கமான சூழ்நிலையில், பராமரிக்கும் புதுச்சேரி சிறைநிர்வாகத்திற்கு பாராட்டுக்கள். கைதிகளின் மனதில் தார்மீக நெறி முறைகளைப் புகட்டுவதற்கும், அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றுவதற்கும், புதுவை சிறைச்சாலை ஒரு சிறந்த உதாரணம்.

**NJL ரமேஷ்**


99940 89133



99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

## வாசகர் கடிதம்

**"ஸ்லோக வகுப்புகள்"** வேதபாரதியின் பொக்கிஷம்.

வேதபாரதியுடன் இணைந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மதுரை ஸ்ரீமுரளி மாமா & ஸ்ரீமதி நீலா மாமி ஸ்ரத்தையுடன் நடத்தி வரும் online ஸ்லோகா வகுப்புகள் நம் அனைவருக்கும் கிடைத்த ஓர் வரப்ரசாதம். நாம் அனைவரும் வீட்டில் இருந்தபடியே பல நல்ல ஸ்லோகங்களை அர்த்தம் (பாஷ்யம்) மற்றும் ராகத்துடன் மட்டும் அல்லாமல் இடையிடையே சிறந்த பல புராண கதைகளையும் சேர்த்து அறிந்து கொண்டோம்.

பொதுவாக ஒரு குடும்பத்தில் ஆண் அல்லது பெண் மட்டும் பொது நல சேவையில் இருப்பர் ஆனால் மதுரை மாமா & மாமி இருவரும் ஆத்மார்த்தமாக ஈடுபாட்டுடன் சேவை மனத்துடன் இதனை ஒரு யக்ஞம் போல் நடத்தி வருகின்றனர். இருவரும் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மர் போல் நம் அனைவரின் மனதிலும் சிம்மாசனம் இட்டு அமர்ந்துவிட்டனர். எங்களது ஆசீர்வாதங்கள் மற்றும் வாழ்த்துக்கள் . ராம் ராம்.

**திருச்சி K.கணேசன் & மீனலோசனி கணேசன்.**

---

வேதபாரதியின் அக்டோபர் இதழில், "வாக்குண்டம்... பஞ்ச பூத மூலிகை" என்பதன் உள் அர்த்தத்தை மிக அருமையாக வெளிக்கொண்டு வந்துள்ளது.

**லலிதாகுமார் ஸ்ரீராம்**

---

இந்த மாதம் முதல் ஆரம்பித்த ஔவையாரின் மூதுரையின் முதல் பாடலான "வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்..'' பாடலில் தமிழ் வைத்திய முறையின் ஐந்து தமிழ் மூலிகைகளைப் பற்றிய விளக்கம் மிகவும் அருமையாக இருந்தது. இதுவரையில் கேள்விப்படாத விளக்கத்தை கொடுத்ததற்கு மிகவும் நன்றி.

**K.நரசிம்மன், மடிப்பாக்கம்**



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு “ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்” **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன், அறங்காவலர்**
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை
பரிந்துரைத்து ஊக்க
வெகுமதியை பெறுங்கள்
₹150*
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
STEP 2
STEP 3
₹50
STEP 4
₹50
CUB நெட் பேங்கிங், மொபைல்
பேங்கிங் மற்றும் இணையதளம்
மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code
to Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
+91 88866 10805 (or)
சிட்டி யூனியன் பேங்க்
CUB
www.cityunionbank.com
ராசியான பேங்க், சுலபமான பேங்க்

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th November 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, ..., திருப்பூர் - 4. போன்: 0421 2241829 | 78, ..., திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), ..., திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
VEDABHARATHI
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.